DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 573/19

Deposition of LW 8/ PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனிச்சாமி | Caste | : |
| Father's Name | : முத்து | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 09-11-2023

முதல் விசாரணை

1) நான் தற்போது வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) வடக்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்து உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் என்பவரின் கையொப்பம் எனக்கு நன்றாகத் தெரியும். கடந்த 14.11.2018 ம் தேதி மாலை 18.00 மணிக்கு உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் நிலைய அலுவலில் இருந்த போது சின்னதம்பி மகன் தினேஷ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று நிலைய குற்ற எண் 831/2018 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 387 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (புகார் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா. ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

3) உதவி ஆய்வாளர் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 14.11.2018-ம் தேதி 18.45 மணிக்கு சம்பவ இடத்தை ராஜேந்திரன் மற்றும் ஹரிபிரசாத் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்(பார்வை மகஜர் அ.சா. ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது மாதிரி வரைபடம் அ.சா. ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

4. சாட்சிகள் தினேஷ்குமார், நந்தகுமார், கார்த்தி, ராஜேந்திரன், ஹரிபிரசாந்த் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிளின் வாக்கு மூலத்திலிருந்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை தேடியபோது ஈரோடு வீரப்பன் சாத்திரம் முனியப்பன் கோவில் அருகில் நின்று கொண்டிருந்த எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். அதன் பின்னர், தன்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 387 – ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் சொன்ன தேதி நேரத்தில் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன தேதி நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை. சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன தேதி நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.